بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 30/12/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரர், மகத்துவமிக்க பத்ர் போர் சஹாபி ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் புகழுக்குரிய நற்பண்புகளைப் பற்றிய ஈமானுக்கு வலுவூட்டும் குறிப்பு

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ﴿۲﴾ اَلرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۳﴾ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ﴿۵﴾

اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பின் இறுதியில் நான், 'பத்ர் போர் சஹாபாவின் நற்குறிப்பு இப்போது நிறைவடைந்தது; ஆனால், முன்னர் எடுத்துரைத்துக்கபட்ட சில சஹாபாவைப் பற்றிய சில விஷயங்கள் பின்னர் முன்வந்துள்ளன. அவற்றை நான் ஏதாவது ஒரு நேரத்தில் எடுத்துரைப்பேன் அல்லது அவை வெளியிடப்படும் போது முன் வந்து விடும்' என்று கூறியிருந்தேன். சிலர் இந்த வரலாற்றைக் கேட்டு நாங்கள் மிகவும் பயன் பெற்றோம் என்று எழுதுகிறார்கள். எனவே, இந்தப் பகுதியும் குத்பாக்களில் எடுத்துரைக்கப்படுவதை நான் பொருத்தமாக கருதினேன்.

இது குறித்த முதல் குறிப்பு ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களுடையது. இவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரர் ஆவார்கள். அன்னாருக்கு மிகவும் பிடித்தமானவராக இருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு ஹம்ஸா என்ற பெயர் மிகவும் பிடித்தமானதாக இருந்தது.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் துணைவியார்கள் மற்றும் அவர்கள் மூலமாக பிறந்த சந்ததிகள் பற்றி சுருக்கமாக கூறிய பிறகு கூறினார்கள்:*

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றது குறித்து அறிவிப்பில் இவ்வாறு உள்ளது: ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் கோபத்தின் நிலையில், 'ஆம்! நான் முஹம்மதின் (ஸல்) மார்க்கத்தில் இருக்கிறேன்' என்று கூறினார்கள். அவர்கள் கூறுகிறார்கள்:

'நான் என் மூதாதையர்களின் மதத்தைக் கை விட்டு விட்டேன் என்று பின்னர் எனக்கு வெட்கம் ஏற்பட்டது. என்னால் இரவு முழுவதும் தூங்க முடியவில்லை. பிறகு, நான் கஅபா ஆலயத்துக்கு அருகில் வந்தேன். 'அல்லாஹ்வே எனது உள்ளத்தை உண்மைக்காகத் திறந்து விடுவாயாக! சஞ்சலங்களையும் சந்தேகங்களையும் அகற்றி விடுவாயாக!' என்று

அல்லாஹ்வுக்கு முன் அழுது மன்றாடினேன். நான் தற்போது துஆவை முடித்திருக்கக்கூட இல்லை. அதற்குள் பொய் என்னை விட்டு விலகி விட்டது. அதற்குப் பிறகு நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முன் ஆஜரானேன். என் நிலை அனைத்தையும் கூறினேன். அதற்கு ஹுஸூர் (ஸல்) அவர்கள் அல்லாஹ் எனக்கு உறுதியான பாதத்தை வழங்க துஆ செய்தார்கள்.

ஓர் அறிவிப்புக்கு ஏற்ப ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் தமக்கு ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்களை அவர்களது உண்மையான வடிவத்தில் காட்டுமாறு பணிவுடன் கேட்டுக் கொண்டார்கள். அதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'உங்களிடம் அவர்களைப் பார்ப்பதற்கான ஆற்றல் இல்லை' என்று கூறினார்கள். அவர்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'உங்கள் இடத்தில் அமர்ந்து கொள்ளுங்கள்' என்று கூறினார்கள். அறிவிப்பாளர் கூறுகிறார்கள்:

பிறகு, ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள், கஅபா ஆலயத்தில், இணைவைப்பாளர்கள் வலம் வரும் போது தம்முடைய ஆடைகளைத் தொங்க விடும் அந்தக் கட்டை மீது இறங்கி வந்தார்கள். பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'உங்கள் பார்வையை உயர்த்திப் பாருங்கள்!' என்று கூறினார்கள். அவர்கள் பார்வையை உயர்த்திப் பார்த்த போது, ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்களின் இரண்டு பாதங்களும் ஒரு விலையுயர்ந்த பச்சை நிறக் கோமேதகத்தைப் போன்று இருப்பதைக் கண்டார்கள். பிறகு, ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் மயக்க நிலையில் விழுந்தார்கள்.

ஹிஜ்ரீ 2 ஆம் ஆண்டு ஸஃபர் மாதத்தில், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் 'வத்தான்' போருக்காக முஹாஜிர்களின் ஒரு கூட்டத்துடன் புறப்பட்டார்கள். இஸ்லாத்தின் கொடி ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் கையில் இருந்தது. ஜமாதில் ஊலா ஹிஜ்ரீ 2 ஆம் ஆண்டில் மீண்டும் மக்கத்து குறைஷியர்கள் தரப்பிலிருந்து ஒரு செய்தியறிந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் 150 முதல் 200 பேர் வரையிலான மக்களுடன் போருக்காகப் புறப்பட்டார்கள். அப்போது மீண்டும் ஒருமுறை இஸ்லாத்தின் கொடி ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் கையில் இருந்தது.

பத்ர் யுத்தத்தில் ஒற்றையாகப் போர் புரியும் போது குறைஷிய படையில் இருந்து உத்பா தன் சகோதரன் ஷீபாவையும் தன் மகன் வலீதையும் உடன் அழைத்துக் கொண்டு படையிலிருந்து முன்னால் வந்தான். அரேபியாவின் தொன்மையான வழக்கப்படி தனித்து ஒற்றையாகப் போர் புரிய அழைத்தான். அன்ஸாரிகள் அவர்களை எதிர்கொள்ள முன் சென்றபோது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவர்களைத் தடுத்து விட்டு, ஹஸ்ரத் அலீ (ரலி), ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) மற்றும் ஹஸ்ரத் உபைதா பின் முத்தலிப் (ரலி) ஆகியோருக்கு முன்செல்லுமாறு வழிகாட்டல் வழங்கினார்கள்.

இவர்கள் மூவரும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு மிக நெருங்கிய உறவினர்களாக இருந்தார்கள். ஒவ்வோர் ஆபத்தான தருணத்திலும் தம் உறவினர்கள் எல்லாருக்கும் முதலாக செல்ல வேண்டும் என்பதையே

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் விரும்பினார்கள். உபைதா பின் முத்தலிப் வலீதோடும் ஹம்ஸா உத்பாவோடும் அலீ ஷீபாவோடும் சண்டையிட்டார்கள்.

ஹம்ஸாவும் அலீயும் ஓரிரு வாள் வீச்சிலேயே தங்கள் எதிரிகளை மண்ணில் விழச் செய்து விட்டார்கள். ஆனால், உபைதாவுக்கும் வலீதுக்கும் இடையில் சில நல்ல வாள் வீச்சுகள் நடந்தன. கடைசியில், இருவரும் ஒருவர் மற்றவரின் கையால் கடும் காயம் அடைந்து விழுந்தார்கள். இதனால், ஹம்ஸாவும் அலீயும் வலீதை உடனடியாக கொன்று விட்டார்கள். உபைதாவைத் தம் முகாமுக்குத் தூக்கி வந்தார்கள். ஆனால், உபைதாவால் அந்தப் பெருந்துயரத்தில் இருந்து உயிர் தப்ப முடியவில்லை. அவர்கள் பத்ரில் இருந்து திரும்புகையில் வழியில் மரணித்து விட்டார்கள்.

மது தடையாவதற்கு முன்னர் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் ஒட்டகங்களை போதை நிலையில் மிகவும் இரக்கமற்ற முறையில் கொன்று விட்டார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு இது தெரிய வந்த போது அவர்கள் மிகவும் வேதனை அடைந்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முன் ஆஜராகி, நடந்த அனைத்தையும் கூறினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த விபரங்கள் அனைத்தையும் கேட்டு அந்த இடத்திற்கு வருகை தந்தார்கள். மேலும், கோபத்தை வெளிப்படுத்தினார்கள். அப்போதும் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் போதை நிலையில் இருந்தார்கள். எனவே அவர்கள், அனைவரையும் பார்த்து, 'நீங்கள் எல்லாரும் என் மூதாதையர்களின் அடிமைகள்' என்று கூறினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அங்கிருந்து திரும்பி வந்து விட்டார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* மது தடை செய்யப்பட்ட பிறகு சஹாபா (ரலியல்லாஹு அன்ஹும்) மதுவுக்கு அருகில் கூட செல்லவில்லை. இதுதான் அந்த சஹாபா பெருமக்களின் தரமாக இருந்தது.

பனூ கேன்காவுடனான போரிலும் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் முன்னணி வகித்தார்கள். அந்த யுத்தத்திலும் இஸ்லாத்தின் கொடி ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் கையில் இருந்தது. மதீனத்து யூதர்களில் எல்லாருக்கும் முதலாக பனூ கேன்கா கோத்திரத்தினரே, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் செய்யப்பட்டிருந்த உடன்படிக்கையை முறித்தார்கள். பத்ருக்குப் பிறகோ, அவர்கள் அதிகம் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்து விட்டார்கள். காழ்ப்புணர்ச்சியையும் பொறாமையையும் வெளிப்படுத்திய வண்ணம் உடன்படிக்கையை முறித்து விட்டார்கள்.

ஒரு முஸ்லிம் பெண்மணி சந்தையில் ஒரு யூதரின் கடையில் பொருள்கள் வாங்கச் சென்றார். அப்போது சில தீய யூத இளைஞர்கள் அந்தப் பெண்ணை மிகவும் ஒழுக்கக் கேடான முறையில் சீண்டினார்கள். சுயம் கடைக்காரனே என்ன தீமையை செய்தான் என்றால், அந்தப் பெண்ணின் கீழாடையின் அடிப்பகுதியின் ஓரத்தை அவளுக்குத் தெரியாமல், ஏதோ முள் போன்ற ஒன்றில் அவளது முதுகில் இருந்த ஆடையோடு சேர்த்து தொங்க விட்டு

விட்டான். அந்தப் பெண் திரும்பிச் செல்ல முற்பட்ட போது நிர்வாணமாகிவிட்டார். இதைப் பார்த்த அந்த யூதர்கள் உரக்க சப்தமிட்டு சிரிக்க ஆரம்பித்தனர். முஸ்லிம் பெண் வெட்கத்தால் உரக்க கத்தி, உதவிக்கழைத்தார். தற்செயலாக ஒரு முஸ்லிம் அங்கு இருந்தார். அவர் உடனடியாக அங்கு சென்றார். ஒருவர் மற்றவருடனான சண்டையில் யூதக் கடைக்காரன் கொல்லப்பட்டான். இதனால், அந்த முஸ்லிம் மீது நாலாப்புறத்திலிருந்தும் வாள்கள் வீசப்பட்டன. தன்மான உணர்வு கொண்ட அந்த முஸ்லிம் அங்கேயே மாண்டு வீழ்ந்தார். இந்த சம்பவத்தால் முஸ்லிம்களுக்கும் யூதர்களுக்கும் இடையில் ஒரு கலவர சூழல் உருவாகி விட்டது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இந்த சம்பவம் பற்றிய தகவல் கிடைத்ததும் அன்னார் பனூ கேன்காவின் தலைவர்களை ஒன்று திரட்டி, 'இந்த முறை சரியல்ல; நீங்கள் திருந்தி விடுங்கள். இறைவனுக்கு அஞ்சுங்கள்' என்று கூறினார்கள். இதற்கு பனூ கேன்கா கோத்திரத்தினர் வருத்தத்தை வெளிப்படுத்துவதற்கு பதிலாக, சற்றும் கீழ்படியாத வகையில் பதிலளித்தார்கள். மேலும், 'பத்ர் வெற்றியில் ஆணவம் கொள்ளாதீர்கள். எங்களுடன் போர் நடக்கும் போது, போரிடுபவர்கள் எப்படி இருப்பார்கள் என்று தெரிந்து விடும்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வேறு வழியின்றி சஹாபாவின் ஒரு கூட்டத்தை அழைத்துக் கொண்டு பனூ கேன்காவின் கோட்டைகளை நோக்கி புறப்பட்டுச் சென்றார்கள். பனூ கேன்கா கோத்திரத்தினரும் உடனடியாக போருக்கு ஆயத்தமாகி விட்டார்கள். கோட்டைகளில் அடைபட்டு இருந்து கொண்டார்கள். முஸ்லிம்கள் பனூ கேன்காவின் கோட்டைகளை முற்றுகையிட்டு விட்டார்கள். 15 நாள்கள் வரை முற்றுகை தொடர்ந்தது.

கடைசியில் பனூ கேன்காவின் முழு ஆற்றலும் அகம்பாவமும் முறிந்து போன பிறகு, அவர்கள் 'தம் செல்வங்களை முஸ்லிம்கள் எடுத்துக் கொள்ளலாம். ஆனால், தம்முடைய உயிர்கள் மற்றும் மனைவி மக்கள் மீது முஸ்லிம்களுக்கு எந்த உரிமையும் இருக்காது' என்ற நிபந்தனையின் பேரில் கோட்டைக் கதவுகளைத் திறந்து விட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த நிபந்தனையை ஏற்றுக் கொண்டார்கள்.

மூஸவிய்ய ஷரீஅத்தின் அடிப்படையிலோ இந்த மக்கள் அனைவரும் கொல்லப்படத் தகுந்தவர்களாக இருந்தார்கள். ஆனால், ஒன்று, இது அந்த சமுதாயத்தின் முதல் குற்றமாக இருந்தது. இரண்டாவது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கருணைமிக்க, பரிவுமிக்க உள்ளம் கடைசி சிகிச்சையாக இருக்கும் உச்சகட்ட தண்டனையை நோக்கி, ஆரம்ப கட்டத்தில் செல்ல முடியாதாக இருந்தது. ஆனாலும், அந்தக் கோத்திரம் மதீனாவில் வசிப்பது சட்டையின் கைக்குள் பாம்பை வளர்ப்பதைக் காட்டிலும் குறைவான விஷயமாக இருக்கவில்லை.

எனவே, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பனூ கேன்கா கோத்திரத்தைக் குறித்து, அவர்கள் மதீனாவை விட்டுச் சென்று விட வேண்டும் என்றே தீரமானித்தார்கள். அவர்கள் செய்த குற்றத்தோடு ஒப்பிடுகையில், இது

மிகவும் மென்மையான ஒரு தீர்ப்பாக இருந்தது. அதில் சுய பாதுகாப்பு அம்சமும் கருத்திற் கொள்ளப்பட்டிருந்தது. ஆக, பனூ கேன்கா கோத்திரத்தினர் மிகவும் நிம்மதியோடு சிரியா பக்கம் சென்று விட்டனர்.

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் உஹது போரில் ஷஹீத் ஆனார்கள். அல்லாஹ் இதைப் பற்றி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குக் கனவின் மூலமாக முன்னரே தெரியப்படுத்தி விட்டிருந்தான். எனவே, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தாம் ஒரு செம்மறியாட்டைப் பின் தொடர்(ந்து அதைக் கொல்)வதாகவும், தமது வாளின் முனை உடைந்து விட்டதாகவும் கனவில் கண்டார்கள். அதற்கு ஹுஸூர் (ஸல்) அவர்கள் இவ்வாறு விளக்கம் அளித்தார்கள்:

'செம்மறியாட்டைக் கொல்வதன் பொருள், நான் எதிரிகளின் படைத்தளபதியை அழிப்பேன். வாளின் முனை உடைவதன் பொருள், இந்தப் போரில் என் குடும்பத்தைச் சேர்ந்த மிகவும் நெருக்கமான ஒருவர் ஷஹீத் ஆவார்.' எனவே, இந்தப் போரில் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் ஷஹீத் ஆக்கப்பட்டார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள், இணைவைப்பாளர்களின் கொடியை ஏந்தியிருந்த தல்ஹாவைக் கொன்று விட்டார்கள்.

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் ஷஹாதத்துக்குப் பிறகு, அவர்களின் உடலும் சிதைக்கப்பட்டது. அவர்களின் தோற்றம் சீர்குலைக்கப்பட்டது. மூக்கு, காது ஆகியவை அறுக்கப்பட்டன. வயிறு கிழிக்கப்பட்டது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவர்களின் இந்த நிலையைக் கண்ட போது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குக் கடுமையான வேதனை ஏற்பட்டது. ஓர் அறிவிப்புக்கு ஏற்ப, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'அவர்களின் 70 பேரின் உடலை சிதைத்து விடுவேன்' என்று ஆணையிட்டுக் கூறியதாக வருகிறது. அதற்கு இந்த வசனம் இறங்கியது:

وَاِنْ عَاقَبْتُمْ فَعَاقِبُوْا بِمِثْلِ مَا عُوْقِبْتُمْ بِهٖ ۚ وَلَئِنْ صَبَرْتُمْ لَهُوَ خَيْرٌ لِّلصّٰبِرِيْنَ ﴿١٢٧﴾

''நீங்கள் தண்டனை வழங்கினால், உங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியின் அளவிற்கே தண்டனை வழங்க வேண்டும். ஆனால், நீங்கள் பொறுமை காத்தால், நிச்சயமாக அது பொறுமை காப்போருக்கு மிகச் சிறந்ததாகும்.'' இதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'பொறுமை காப்போம்' என்று கூறி, தமது சத்தியத்துக்கு ஈட்டுத் தொகை வழங்கி விட்டார்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கூறியதைச் சான்றாகக் கொண்டு ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களுக்குக்காக ஒப்பாரி வைக்கப்பட்ட மற்றும் அதிலிருந்து தடுக்கப்பட்ட சம்பவத்தை எடுத்துரைத்தார்கள்.

அன்ஸாரி பெண்மணிகள் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களுக்காக ஒப்பாரி வைத்தவாறு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்த போது, ஹுஸூர் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்கள். அத்துடன், ஒப்பாரி வைப்பதைத் தடுத்தும் விட்டார்கள்.

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:*

**நாளை மறுநாள் புத்தாண்டும் ஆரம்பமாகிறது. இன் ஷா அல்லாஹ். துஆக்கள் செய்யுங்கள். அல்லாஹ் புத்தாண்டில் அதன் பரக்கத்துக்களைக் கொண்டு நம் மீது அருள்புரிவானாக! இது ஜமாஅத்திற்கும் எல்லா வகையிலும் அருளுக்குரியதாகட்டுமாக! எதிரியின் எல்லா சூழ்ச்சிகளையும் அல்லாஹ் மண்ணோடு மண்ணாக்குவானாக! உலகில் பரவியிருக்கும் ஜமாஅத்களுக்கு அல்லாஹ் முன்னரை விட அதிகம் தமது படைப்பின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!**

**இவ்வாறே, பொதுவாக உலகிற்காக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களைப் போர்களில் இருந்து காப்பாற்றுவானாக! நிலைமைகள் பயங்கரத்திலும் பயங்கரமாகிக் கொண்டே செல்கின்றன. அழிவு வாயைப் பிளந்து கொண்டு நிற்கிறது. என்ன ஆகும் எனத் தெரியாது. ஒவ்வொருவரும் தனது பலனை நாடுகிறார். அல்லாஹ்வே கருணை புரிய வேண்டும்.**

**அநீதிக்குள்ளாக்கப்பட்ட தங்கள் சகோதரர்களுக்காகவும் மிக அதிகமாக துஆக்கள் செய்யுங்கள். அல்லாஹ் வரும் வருடத்தில் எல்லா விதமான அநீதியிலிருந்தும் அக்கிரமத்திலிருந்தும் அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பாதுகாத்து வைப்பானாக! ஆமீன்!**

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**